Form-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 221/2021

Deposition of witness for: PW - 7

Name : **பாலமுருகன்** Father/Husband Name : **சிதம்பரம்**

Age : Calling :

Date : .09.04.2026

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of the 09 day of 04.2026.

( **சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது** ).

**அரசுதரப்பில் முதல்விசாரணை**

நான் தற்போது விருதுநகர் மாவட்டம் மல்லாங்கிணறு காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2021ம் வருடம் கீழவளவு காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்த போது எனக்கு முன்பு இருந்த முருகையா என்பவர் முதல் விசாரணை முடித்து தொடர் புலன்விசாரணைக்கு என்னிடம் ஒப்படைத்த வழக்கை நான் தொடர் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு கடந்த 12.07.2021ம் தேதி இவ்வழக்கில் காயம்பட்ட பழனிமுருகன் என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் பவானி என்பவரை விசாரித்து அவருக்கு ஏற்பட்ட காயமானது சொற்ப காயம் என்று காயச்சான்றுகள் பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கின் அசா1 ஆண்டிச்சாமியை 12.07.2021ம் தேதி திரும்ப அழைத்து மறு விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இத்துடன் எனது புலன்விசாரணை முடித்து எதிரிகள் மீது பிரிவுகள் 294(b), 323, 324, 427, 506(2) இதசன்கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

எதிரிகள் ஆஜர்

எதிரிகள்தரப்பில் குறுக்குவிசாரணை

நான் மருத்துவர் பவானியை விசாரித்தபோது அவர் தன்னிடம் பழனிமுருகன் தன்னை தெரிந்த 3 நபர்கள் தாக்கியதாக தன்னிடம் சொல்லியுள்ளாரா என்றால் சரிதான். அதேபோல் அசாஆ3ல் ஆண்டிச்சாமி தன்னை மாலை 04.00 மணிக்கு கண்ணாபுரம் கடை அருகே கல்லு, கட்டை வைத்து தாக்கியதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். அசா6 எனது விசாரணையில் பழனியான்டி மகன் பழனிமுருகன் தன்னிடம் சிகிச்சைக்கு வந்ததாக குறிப்பிட்டு சொல்லியுள்ளார் என்றால் சரிதான். அதேபோல் காயம்பட்ட நபரை மருத்துவமனைக்கு ராஜ்குமார் என்பவர் அழைத்து வந்ததாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். நான் இந்த வழக்கு பதிவு செய்த சார்பு ஆய்வாளர் முருகராஜ் என்பவரை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள குற்ற இறுதி அறிக்கையில் காலம் 10ல் எந்த ஒரு பொருளையும் கைப்பற்றியதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோல் நான் தாக்கல் செய்துள்ள குற்ற பத்திரிக்கையில் எந்த ஆதராவத்தையும் கைப்பற்றி குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அதேபோல் நான் தாக்கல் செய்துள்ள குற்ற இறுதி அறிக்கையில் எந்த ஒரு புகைப்படம் மற்றும் ஒளிபதிவு குறித்து குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அசாஆ1 மற்றும் ஆசாஆ4ல் காவ்யா என்ற பெண்னை கொலை மிரட்டல் விடுத்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2) நான் 12.07.2021ம் தேதி இவ்வழக்கின் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான், அதேபோல் குற்ற இறுதி

அறிக்கையில் காவ்யா, ராஜ்குமார், சங்கிதா, லெட்சுமணன், சந்திரன் ஆகியோர்களை சாட்சியாக சேர்த்தாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கின் சம்பவத்தின்போது ஆயுதத்தை பயன்படுத்தியதாகவோ, சேதாரம் ஏற்படுத்தியதாகவோ, இரத்தம்படிந்த துணி, ஆகியவற்றை கைப்பற்றி தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதேபோல் நான் தாக்கல் செய்து மாதிரி வரைபடத்தில் ஆண்டியப்பன் பலசரக்கு கடை என்று குறிப்பிட்டுள்ளேன், அந்த ஆண்டியப்பனை வழக்கில் சாட்சியாக விசாரித்துள்ளேனா என்றால் அந்த ஆண்டியப்பன் பலசரக்கு கடையை நடத்துபவர் அசா1 ஆன ஆண்டிச்சாமி ஆகும். அந்த விவரத்தை குற்ற இறுதிஅறிக்கையில் கூறியுள்ளேனா என்றால் அசா1 என்னிடம் கொடுத்த வாக்குமூலத்தில் உள்ளது. அதேபோல் சம்பவத்தில் காயம்பட்டதாக சொல்லப்படும் பழனிமுருகன் என்னிடம் வாக்குமூலம் எதுவும் கொடுத்தாரா என்றால் இல்லை.

3) அதேபோல் அசா1 ஆண்டிச்சாமிக்கும், அவரது தாயாரான பாப்பாவிற்கும் எந்த ஒரு காயமும் ஏற்பட்டதாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான். நான் சொன்னதுபோல் இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை, இதற்கு முன்னர் வழக்கு பதிவு செய்த சார்பு ஆய்வாளர் எந்த ஒரு சாட்சிகளையும் விசாரிக்காமல் வழக்கு பதிவு செய்துள்ளார், நானும் எந்த ஒரு சாட்சியும் விசாரிக்காமல் வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் அசா1 ஆண்டிச்சாமியை எந்த தேதியில் மறு விசாரணை செய்தேன் என்றால் 12.07.2021ம் தேதி, அது சம்மந்தமாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். நான் எந்த ஒரு மறுவிசாரணை செய்யவில்லை,

வாக்குமூலத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை, வழக்கிற்காக நீதிமன்றத்தில் வாக்குமூலம் தாக்கல் செய்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை, எதிரிகள் மீது பொய்யான குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.